2011 ஜனவரி 13]

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம் மற்றும் பதிலுரை. பேசுவோர் பட்டியலின்படி முதலில் திரு. ஜி.கே. மணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 13 ஆவது சட்டப் பேரவையின் 15 ஆவது கூட்டத் தொடரில் ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆங்கிலப் புத்தாண்டு, 2041–42 திருவள்ளுவர் ஆண்டு, தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள், தைப் பொங்கல், தை தை என தை மகள் வருகின்றாள்; தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு, ஒட்டுமொத்தத் தமிழக மக்களுக்கு நல்ல ஆண்டாக அமையவும், இது இனிய ஆண்டாக அமையவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழகத் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்கள் சகோதர சகோதரிகளுக்கும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், செய்தி ஊடக நண்பர்களுக்கும், உணவளிக்கும் விவசாயப் பெருமக்களுக்கும், உடை கொடுக்கும் நெசவாளப் பெருமக்களுக்கும், இருப்பிடம் கட்டிக் கொடுக்கும் கட்டுமானத்